# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# ஜே ஸ்ரீ ரங்கா மன்றம் (கூட்டிணைத்தல்)

**ஜே ஸ்ரீ ரங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். எஸ். தௌபீக் அவர்களால்*
*2017, நவெம்பர் மாதம் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, யூலை மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *215 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஜே ஸ்ரீ ரங்கா மன்றம்
## (கூட்டிணைத்தல்)

## ஜே ஸ்ரீ ரங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

முன்னுரை.

"ஜே ஸ்ரீ ரங்கா மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஜே ஸ்ரீ ரங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஜே ஸ்ரீ ரங்கா மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த ஜே ஸ்ரீ ரங்கா மன்றம் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் "ஜே ஸ்ரீ ரங்கா மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) நாட்டின் சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல்;

(ஆ) சமய சார்பான நிலையங்களின் அபிவிருத்திக்கு உதவுதல்;

(இ) தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;

(ஈ) இலங்கை வாழ் இனங்களுக்கிடையில் சமாதானத்துடனும், பரஸ்பர உறவுடனும் வாழ்வதற்கு அவசியமான ஆலோசனைகளையும் ஒத்தாசைகளையும் வழங்கல்;

(உ) கிராமிய பிரதேசங்களில் சுற்றாடல் பேணலுடன் தொடர்புடைய கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கல்;

(ஊ) விஞ்ஞான கற்கைகளின் முன்னேற்றத்திற்காக தொழில்நுட்ப நிலையங்களைத் தாபித்தல்;

(எ) சிறுவர்கள் மற்றும் பெண்களின் விருத்திக்கென சமூக நடமாடும் கருத்திட்டங்கள் மற்றும் கல்வி அல்லது

பயிற்சித் திட்டங்களை வடிவமைப்பதும் நடைமுறைப் படுத்தலும்;

(ஏ) இன, சாதி, மத வேறுபாடின்றி கல்வி, மத, கலாசார, கலைசார் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபி விருத்திக்கு உதவுதலும்;

(ஐ) மக்களின் ஒழுக்க மற்றும் கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் வழிவகைகளை மேற் கொள்ளல்;

(ஒ) பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களின் கலை, விளையாட்டு மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத் தும் நோக்கில் வாழ்க்கை தொழிற்பயிற்சி நிறுவனங் களை உருவாக்குதல்; அத்துடன்

(ஓ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைதலும் ஒத்துழைத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், பிரதி தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு பேரைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப் போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றின் மூலம் இச்சட்டத் தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபை யானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டி ருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப் பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

***6***. *(1)* ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பினர்கள் வகுக்கப்படுதலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலகுதலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர்கள் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஈ) பணிப்பாளர்கள் சபையினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள்; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்துக்குச் செலுத்தப் படற்பால வுமான கடன்கள்.

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, இறுதி விருப்பாவணம், நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்

பாளர்கள் சபையினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**9**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள வுமுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**10**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவகமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**11.** (1) பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டு செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் வருமானம் மற்றும் செலவுக் கணக்கு மற்றும் ஐந்தொகை கணக்கு என்பனவும் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது மன்றத்தின் ஓர் உறுப்பினரின் முன்னிலையிலன்றி, எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது எவரினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்